1st November 1962]

(*b*) the number of applications received under each scheme:

(*c*) the number of applications so far accepted ; and

(*d*) the number of applications yet to be considered ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) to (*d*) A statement[a] is placed on the Table of the House.

திரு. வை. சங்கரன் : எந்த அடிப்படையில் வீடுகள் 'அலாட்' செய்யப்படுகின்றன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதிலே இரண்டு, மூன்று விதமான வீடு கட்டும் திட்டங்கள் இருக்கின்றன. கனம் அங்கத்தினர் எதைப்பற்றிக் கேட்கிறார் என்று தெரியவில்லை. எல்லாவற்றுக்கும் வேண்டுமானாலும் பதில் சொல்லிவிடுகிறேன். 'ரெண்டல் ஹவுசிங் ஸ்கீம்' படி சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கக்கூடிய இடங்களுக்கு அந்தந்த இலாகாவின் சிபார்சின்படி கொடுக்கப்படுகிறது. 'ஹையர் பர்சேஸ் சிஸ்டத்தின்' படி பொதுமக்களுக்கு வீடு ஒதுக்குவதற்கு ஒரு கமிட்டி வைத்திருக்கிறார்கள். இத்தனை காலமாக ஒருவர் அப்ளிகேஷன் போட்டு வருகிறார் என்பதைப் பார்த்து, அப்ளிகேஷன் போடுகிறவர்களுக்கு வேறு வீடு இருக்கக்கூடாது என்பதையெல்லாம் பரிசீலனை செய்து அந்த விதிகளின்படி கமிட்டியினர் அலாட்மெண்ட் செய்கிறார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல் : வீட்டு வசதிக் குழுவில் அண்மையில் புதிதாக நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள் யார் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : புதிதாக, திரு. எஸ். ஆர். பி. பொன்னுசாமி அவர்களும், திரு. சி. ஆர். ராமசாமி அவர்களும் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திரு. வை. சங்கரன் : வேறு ஜில்லாக்களில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கும்கூட சிட்டி இம்ப்ரூவ்மெண்ட் டிரஸ்டிலிருந்து வீடுகள் ஒதுக்கப்படுவதாகக் குறைபாடுகள் இருக்கின்றன என்பது அரசாங்கத்துக்கு தெரியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : விதிகளின்படி வேறு வீடு வைத்துக் கொண்டிருந்தால் ஹவுசிங் போர்டு வீடு ஒதுக்குவதில்லை.

*1034 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி** : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-62-ல் அரசாங்க சிப்பந்திகளுக்கு வீடுக் கட்டும் திட்டத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ? எவ்வளவு செலவானது ?

---

a Printed as Appendix III on pages 439—441.

[1st November 1962

(இ) இந்தத் திட்டத்தின் நிர்வாகத் தலைமை யாரிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) Budget provision made in 1961–62 :—

Amount utilised up to 31st March 1962.

	RUPEES IN LAKHS.	RUPEES IN LAKHS.
State Housing Board ..	**25·00**	**19·63**
Public Works Department	**11·50**	**10·70**

(இ) The Chairman, State Housing Board and the Chief Engineer, Public Works Department (General) are the two housing agencies who are implementing the Rental Housing Scheme for State Government Employees in this State.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் சபாநாயகர் அவர்களே, மாவட்டங்களிலே அரசாங்க சிப்பந்திகளுக்கு வீடு கட்டும் திட்டமானது சரியாகச் செயல்படவில்லை என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா ? அவ்வாறு சரியாகச் செயல்படாததற்குக் காரணம் ரெவின்யூ போர்டு தலைமை நிர்வாகத்தை வைத்திருப்பதுதான் என்பதால் அந்தப் பொறுப்பைக் கலெக்டர்களிடத்தில் ஒப்படைக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் சொல்லுகின்ற வாதம் சரியல்ல. அந்தத் திட்டம் சரியாகச் செயல்படவில்லை என்று இதுவரை யாரும் சொல்லவில்லை. கனம் அங்கத்தினர்தான் இப்போது சொல்லுகிறார்கள். இந்த ஸ்கீம் கலெக்டர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டு, எந்த இடத்தில் நிலம் வாங்குவது, என்பதுபற்றியெல்லாம் அவர்களுடைய ஆலோசனைப்படி. முடிவெடுத்து ஒவ்வொரு ஜில்லாவிலும் வருஷம் ஒன்றுக்கு 50 வீடுகள் கட்டவேண்டுமென்று திட்டம் வகுத்திருக்கிறோம்.

** 1035 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) 1962-ல் சர்க்கார் ஊழியர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

(இ) அதில் மத்திய சர்க்கார் உதவித் தொகை எவ்வளவு ?

(உ) 1962-ல் மாவட்ட வாரியாக எத்தனை வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) to (உ) A statement [a] is laid on the Table of the House.

* 1036 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the various schemes proposed by the State Housing Unit, Madurai ; and

---

a Printed as Appendix IV on pages 441–442.